

கழக இளைஞர் அணி மாநில மாநாட்டின் நிறைவுப் பேருரையாற்றும் முன், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கிய காட்சி! அருகில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (21.1.2024) சேலம், தெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், இளைஞர் அணி சார்பாக, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசாக செங்கோலினை வழங்கினார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2–ஆவது மாநில மாநாட்டில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு அமைத்திருந்த புகைப்பட கண்காட்சியை அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். இக்கண்காட்சியில் 1980–ல் இளைஞர் அணி தொடங்கப்பட்டதிலிருந்து 2023 வரை இளைஞர் அணியின் செயல்பாடுகள் குறித்த அரிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. இந்த கண்காட்சியை கடந்த இரண்டு நாட்களாக 80 ஆயிரம் பேர் கண்டுகளித்துள்ளனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் – கழக இளைஞரணிச் செயலாளருக்கும், மாநாட்டின் ஒருங்கிணைப்பாளரும், கழக முதன்மைச் செயளலாளருமான – அமைச்சர் கே.என்.நேரு, வெள்ளி வீரவாளும், வெள்ளிக் கேடயமும் வழங்கிய காட்சி!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (21.1.2024) சேலம், தெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், நீட் தேர்விற்கு எதிரான 85 இலட்சம் "நீட் விலக்கு நம் இலக்கு" கையெழுத்து படிவங்களை குடியரசு தலைவரிடம் ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மாநாட்டில் – கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் – அமைச்சர் கே.என்.நேரு, மலர் மாலைகள் அணிவித்து கவுரவித்த காட்சி.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், மாநாட்டு மலரினை வெளியிட்டார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் அணி மாநில மாநாட்டில் – திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்களும், முதல்வர் அவர்களின் குடும்பத்தினரும் பங்கேற்ற காட்சி!